பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 13 புதன்கிழமை (24-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 89

# முமமுனைத் தாக்குதல்களுடன் மாதகலில் முன்னேற முயன்ற படை பின்வாங்கிச் சென்றது

## விடுதலைப்புலிகள் விரட்டியடித்தனர்

யாழ்ப்பாணம், பெப். 24

நேற்று விடியும் வேளை, கடல், வான், தரை ஆகிய மூன்று முனைகளிலும் தாக்குதல் நடத்தியவாறு மாதகல் கடற்கரை வீதி ஊடாக முன்னேற முயன்ற படையினரை விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர். சுமார் ஏழு மணிநேரம் நடைபெற்ற உக்கிரச் சண்டையை அடுத்து நேற்று நண்பகலில் படையினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டுப் பின்வாங்கிச் சென்றனர்.

படையினர் தமது முன்னேற்ற முயற்சிக்கு கவச வாகனங்களையும் பயன்படுத்தினர்.

விடாது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன; துப்பாக்கி வேட்டுகளும் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன.

முன்னேற முயன்ற படைகளுக்கு விமானப் படையினரும், கடற்படையினரும் உதவி வழங்கினர்.

புலிகளின் பதில் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது படையினர் தமது முயற்சியைக் கைவிட்டுப் பின்வாங்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஏழு மணி நேரம் சண்டை படைகளுக்கு பலத்த இழப்பு?

நேற்றுக் காலை 5.50 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை — சுமார் ஏழு மணி நேரம் — மாதகல் பகுதியில் உக்கிரச் சண்டை இடம் பெற்றது

இந்தச் சண்டையின்போது படையினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

ஆனால் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து ஊர்ஜிதமான தகவல் ஏதும் இச்செய்தி எழுதப்படும் வரை கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் காயமடைந்தார்.

## புக்காரா, இரு பொம்மர்கள் மற்றும் ஹெலித் தாக்குதல்

நேற்று மாதகல் பகுதியில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது படைகளுக்கு உதவியாக "புக்காரா" ரக விமானமும், இரு பொம்பர்களும் குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தின.

ஹெலிகளில் இருந்தும் றொக்கட் தாக்குதலும், துப்பாக்கித் தாக்குதலும் நடத்தப்பட்டன.

திருவடிநிலை, நெல்லியான் பகுதிகளில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரிய வந்தது. ஆனால் அத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

## கடலிலிருந்து பீரங்கி வேட்டு

நேற்றுக் காலை மாதகல் — திருவடிநிலை கடற்பிராந்தியத்தில் தரித்து நின்ற பீரங்கிப் படகுகளில் இருந்தும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பீரங்கிக் குண்டுகள் மாதகலை அண்டிய பகுதிகளில் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்து அதிர்வை ஏற்படுத்தின.

## ஷெல் குண்டுகளால் அதிர்வு

நேற்றுக் காலை முதல் பலாலி முகாமில் இருந்தும் தெல்லிப்பளை, அளவெட்டி, மாதகல் பகுதியிலிருந்தும் படையினர் அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இந்த ஷெல் குண்டுகள் சுழிபுரம், பண்ணாகம், பனிப்புலம், பண்டத்தரிப்பு, சில்லாலை, பறாளை, திருவடிநிலை, கம்பனை, காட்டுப்புலம், நெல்லியான், தொல்புரம், மூளாய், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் உள்ள அராலி வயல்கள், கொட்டக்காடு ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இந்த ஷெல் குண்டுகளினால் பல வீடுகளும், கட்டடங்களும் சேதமடைந்தன.

ஷெல் குண்டுகள் பெரும் அதிர்வுடன் விழுந்து வெடித்ததால் வலிகாமம் மேற்குப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

## 8 பேர் ஷெல்லினால் காயம்

யாழ்ப்பாணம், பெப். 24

பலாலி மற்றும் மாதகல் பகுதிகளிலிருந்து நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

★ பண்டத்தரிப்பில் விழுந்த ஷெல்லினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த யோசப் அன்னம்மா (வயது 73), அவரது பேரப் பிள்ளைகளான எடிசன் கல்யாணி (வயது 11), எடிசன் காஞ்சனா (வயது 10) ஆகியோர் காயமடைந்தனர். இந்தப் பிள்ளைகளின் தந்தையான எடிசன் 1989 ஆம் ஆண்டில் இந்தியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

★ சுழிபுரம் கம்பனைப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் சுப்பையா மனோரஞ்சனி (வயது 19) —

★ வடலியடைப்பில் விழுந்த ஷெல்லினால் சிவதாஸன் (வயது 11) —

★ வட்டுக்கோட்டை கொட்டைக்காட்டில் விழுந்த ஷெல்லினால் கந்தையா சதீஸ் (வயது 6) ஆகியோர் காயமடைந்தனர். மேற்படி சதீஸ் என்ற சிறுவனின் கைவிரல்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

★ கொட்டைக்காட்டு கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற பொன்னன் நாகேஸ் (வயது 38) இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார். வலது காலிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இவர் காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து சித்தன்கேணி அகதி முகாமில் வசித்து வந்தார்.

இவர்கள் எட்டுப் பேரும் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் ஷெல்லினால் காயமுற்ற சின்னையா சிவரத்தினம் (வயது 45) என்பவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். (உ-12-15-17)

## மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், பெப். 23

வலி மேற்குப் பகுதியில் ஸ்ரீலங்காப் படைகள் நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை அடுத்து பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் வலி மேற்குப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தனர்.

நெல்லியான், சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம், பனிப்புலம், மூளாய், வட்டு தென் மேற்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்களே நேற்று இடம் பெயர்ந்தனர்.

திடீரென — விடியும்வேளை — இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது உடைமைகளைக் கைவிட்டு, வீடுகளிலிருந்து அவசர அவசரமாக வெளியேறினர். சொந்தக்காரர்கள் இன்றி காணப்படும் இப்பகுதி வீடுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தமிழீழ காவல்துறையினர் நேற்று ஈடுபட்டிருந்தனர் (உ)

## ஏனைய இடங்களிலும் பரவலாக ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 23

வலிகாமம் பகுதியில் மட்டுமல்லாது குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் நேற்றுப் பரவலாக ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

பூநகரி ஞானிமடம், ஆலடி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை ஆவரங்கேணி, நல்லூர் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அப்பகுதியில் பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 4.30 மணிக்கு வலிகாமம் கிழக்குப் பகுதியை நோக்கியும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. தொண்டமானாறு, இடைக்காடு, வளலாய்ப் பகுதிகளில் ஷெல் விழுந்து வெடித்தன. (உ-15-17)

## குடாநாட்டில் ஊரடங்கு

யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்றுக் காலை 6 மணி முதல் மறுஅறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதாக கூட்டுப்படைகள் கட்டளைப்பீடம் அறிவித்தது.

ஊரடங்கு காரணமாக யாழ் நகர வங்கிக்கிளைகள் காலை 9 மணி முதல் 10 மணி வரையே வாடிக்கையாளர்களுக்காகத் திறந்திருந்தன.

எனினும் வலி. மேற்கு தவிர்ந்த குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வழமை நிலை காணப்பட்டது

நேற்றுக்காலை காங்கேசன் துறையிலிருந்து பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமாரி' கப்பல் முதலில் ஒரு தொகுதி பொருள்களை மட்டும் இறக்கியது. ஆனால் ஊரடங்கு பற்றிய தகவல் கிடைத்ததை அடுத்து, பொருள்களை இறக்கும் வேலைகள் நிறுத்தப்பட்டன. கப்பல் திரும்பியது.

## மல்லாகத்தில்ஷெல் இளம் பெண் பலி

அளவெட்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றிரவு நடத்திய அகோர ஷெல் தாக்குதல்களினால் இளம் பெண் ஒருவர் பலியானார்; பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்றிரவு 8 மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதல்களின்போது அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் பல ஷெல்கள் விழ்ந்து வெடித்தன.

ஷெல்லுக்கு அஞ்சி, மல்லாகம் குளமன்கால் சென்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளை, உடுவிலில் நேற்று மறியற் போர்

யாழ்ப்பாணம், பெப். 24

பட்டினி நிலையை நீக்கக் கோரியும் அரசின் அடக்குமுறையைக் கண்டித்தும் நேற்று இரண்டு உதவி அரசாங்க அதிபர்கள் பணிமனைகள் முன்னால் மக்கள் மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை, உடுவில் உதவி அரச அதிபர் பணிமனை ஆகியவற்றின் முன்பே நேற்றைய மறியல் போராட்டங்கள் நடைபெற்றன.

வலி-வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் —ஆண்களும் பெண்களுமாக — நேற்றுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்தத்தைத் தொடர

## உறுதியும் வசதியும் புலிகளிடம் உள்ளன

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டிய உறுதியும் வசதிகளும் விடுதலைப் புலிகளிடம் உள்ளன.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு பகுப்பாய்வாளர் ஹரி குணதிலகா முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இராணுவம் எவ்வளவு காலத்துக்குச் சண்டையை நடத்துகின்றதோ, விடுதலைப் புலிகளினாலும் அவ்வளவு காலத்துக்குச் சண்டையை நடத்த முடியும்.

போதுமான ஆயுதங்களும் வெடிமருந்துகளும். அவற்றை ஏற்றிக்கொண்டு வருவதற்குத் தேவையான கப்பல்களும் விடுதலைப் புலிகளிடம் உள்ளன போன்று தெரிகிறது

— இவ்வாறு அவர் மேலும் கூறியதாக "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது. [உ-எ]

### சென்னையிலிருந்து

## 440 மைல் தூரத்தில் வைத்து கிட்டுவின் கப்பல் வழிமறிப்பு

### இந்தியா ஒப்புக்கொள்கிறது

கிட்டுவும் ஏனைய போராளிகளும் வந்த கப்பலை சென்னைக்குத் தென் கிழக்கே 440 கடல் மைல்களுக்கு அப்பால் வைத்து வழிமறித்ததை இந்தியா ஒப்புக் கொண்டிருக்கிறது.

கப்பலில் இருந்த கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரி, தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் ப. நெடுமாறன் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்

அந்த மனுவுக்கு மத்திய பாதுகாப்பு அமைச்சகம் தாக்கல் செய்த பதிலிலேயே இவ்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பொலனறுவையில் சிப்பாய் பலி

பொலனறுவை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் பலியானார் மூவர் காயமடைந்தனர்;

சுமார் நூறு பேரைக் கொண்ட புலிகள் அணி இத் தாக்குதலை நடத்தியதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது. (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

அராலி வடக்கு மடத்தடிக்கு அண்மையில் 25 பரப்பு பயிர்ச் செய்கைக் காணி விற்பனைக் குண்டு. விலை விவரம் நேரில். தொடர்பு: N. செல்வராஜா (N.S.R.), இந்துக் கல்லூரி அருகில், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (24575)

### துளிர்

தமிழ்நாடு அறிவியல் இயக்கமும், புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ் பாடசாலை மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். விவரங்களுக்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6011)

### சோதிடம்

எத்தகைய தீராத கஷ்டங்கள், நஷ்டங்கள், தொல்லைகள், குடும்பப் பிரச்சினைகளில் இருந்து விடுபட சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம் ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (24546)

### தையலகம் கொமிஷனுக்கு

தையலகம் கொமிஷனுக்கு கொடுக்கப்படும். மானிப்பாய் பிரதான வீதியில் சந்தைக்கு முன்பாக நல்ல தொழில் நடந்து கொண்டிருக்கும் தையல் கடை கொமிஷனுக்கு கொடுக்கப்படும். தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும்: மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தைக்கு முன்பாக, மானிப்பாய். (24563)

### சனி மாற்றம்

05 - 03 - 1993இல் நிகழும் சனி மாற்றப் பலாபலன்கள் (பன்னிரு இராசிகளுக்கும் உரியது) விற்பனையாகின்றன. விலை ரூபா 12-00, எங்கும் கிடைக்கும். வெளியீடு! திருக்கணிதம், மட்டுவில், சாவகச்சேரி. (24530)

## சி.ஐ.டியினர் அலுவலகத்தில் தீ

கொழும்பு, கோட்டையில் உள்ள இரகசியப் பொலீஸ் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடத்தில் கடந்த வாரம் நெருப்பு பற்றிக்கொண்டது. இதற்கு மின்சார ஒழுக்கே காரண என்று இரகசியப் பொலீஸ் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 06 — 1919

மறைவு: 24 — 02 — 1991

### அமரர் த. சின்னத்துரை

(குரும்பசிட்டி)

(இளைப்பாறிய சமூகசேவை உத்தியோகத்தர்)

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

– குடும்பத்தினர்.

14, உடையார் ஒழுங்கை,
கந்தர்மடம். (24561)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 07 — 1977

மறைவு: 24 — 02 — 1987

### செல்வி ஆரணி ஜெயதாசன்

(தங்கா)

ஆறு வருடமடி — தங்கா
ஆறுதல் இல்லையடி
ஆரணியே நீ எமக்கு
அமைதியைத் தந்திடடி!

உன்னருள் வேண்டி நிற்கும் உனதன்பு:
பெற்றோர், உற்றார், உறவினர்,
நண்பர்கள்

புதுவீடு,
கருகம்பனை. (24576)

---

கொக்குவில்

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

## மாசி மக இலட்சார்ச்சனை

அன்னை ஸ்ரீ சாயி துர்க்காதேவிக்கு ஆங்கிரச மாசி 14 ஆம் நாள் வியாழக்கிழமை (25 - 2 - 93) தொடக்கம் மாசி 24 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (7 - 3 - 93) வரை இலட்சார்ச்சனை நடைபெறும்.

- ✶ 2 - 3 - 93 செவ்வாய் — நவசக்தி அர்ச்சனை
- ✶ 7 - 3 - 93 ஞாயிறு —நவோத்தரசத சங்காபிஷேகம் இலட்சார்ச்சனை பூர்த்தி விசேட தேவி ஹோமம்.

பூசைகள் தினமும் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகும்.

அடியார்கள் இலட்சார்ச்சனையில் கலந்து கொண்டு அன்னை அருள் பெற்று உய்வதாக.

(சி-4618)

## காணவில்லை

பத்தைமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த

### திரு. மாணிக்கம் முருகேசு



என்பவரை 17-02-93 புதன்கிழமை முதல் காணவில்லை. 82 வயதான இவர் நீலநிறசாரமும் வெள்ளைத் துவாயும் அணிந்து சைக்கிளில் புறப்பட்டுச் சென்றார். மார்பில் அடர்த்தியான நரைத்த உரோமங்களை உடைய இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கு உடன் தொடர்பு கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி சி. முருகேசு,
பத்தைமேனி, அச்சுவேலி.

தகவல்: ஞா. ஜெயலிங்கம்,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

(24577)

## ஓராண்டு நினைவஞ்சலி

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்''



### திருமதி தவமணி கனகரத்தினம்

அன்னை மடியில்: 22 11 — 1924

ஈசன் அடியில்: 07 — 03 — 1992

திதி: 24 — 02 — 1993

அன்புள்ள அம்மாவே! கீதை சொன்ன பாதையில் எங்களை வழிகாட்டின நீங்கள், திடீரென்று ஆறாத்துயரில் ஆழ்த்தி மறைந்து விட்டீர்கள்! உங்களுடைய ஆத்மா சாந்தியடைந்து நித்யமான தெய்வீக நிலையை அடைய வேண்டுமென பறாளாய் முருகமூர்த்தியை வேண்டுகிறோம்.

கணவன் - கனகரத்தினம்,
சகோதரன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

பலாலி வீதி,
திருநெல்வேலி. (24560)

---

## வட - கிழக்குக்கு ரூ. 50 லட்சம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு இவ்வாண்டில் 50 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாம்.

இதற்கான நிதியை வடக்கு-கிழக்கு கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு ஒதுக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

சேவை நிதிக்காக

## நாடக விழா

குழந்தை
ம. சண்முகலிங்கத்தின்

ஒற்றுமையின் சின்னம்
(சிறுவர் நாடகம்)

புழுவாய் மரமாகி
(பாடசாலை நாடகம்)

உறவுகள்
(சமூக நாடகம்)

இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

காலம்: 26 — 02 — 1993 3-00மணி

அன்பளிப்பு: 10/- 20/-

யாழ். மாவட்ட திரிசாரணர் குழு.

"சாரணியத்துடன் தோள் கொடுப்போம்"

### சிங்கம்ஸ் மருந்தகம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(24579)

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

தெல்லிப்பளை

## கலந்துரையாடல்

காலம்: 27 - 02 - 1993 சனிக்கிழமை
காலை 9 மணி

இடம்: மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபம்

### விடயம்

1. கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க கிளைக் குழு புனருத்தாரணம் செய்தல்.
2. உறுப்பினர்கள் பங்குப் பணம் செலுத்துதலும், புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும் பற்றி ஆலோசித்தல்.
3. வருடாந்தப் பொதுக் கூட்டம் நடத்துதல் பற்றி தீர்மானித்தல்.

○ உறுப்பினர்களையும், உறுப்பினர்களாக சேர விரும்புபவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-

பங்குப் பணம் ரூபா 100/- முழுமையாகச் செலுத்தாதவர்கள், பங்குப்பண நிலுவையைச் செலுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விவரங்களுக்கு சுன்னாகத்தில் அமைந்துள்ள கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர். செயலாளர்.

(சி-2544)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



உதிப்பு: 15 — 10 — 1909

உதிர்வு: 24 — 02 — 1991

### திருமதி ஞானம்மா சுப்பிரமணியம்

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய பாசமிகு அன்னைக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

மகன் - சோமநாதன்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

''ஞானவாசம்'',
பொலீஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி. (சி-4612)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# மாற்றம் தேவை

குடாநாட்டில் நிலவும் பட்டினி நிலையை நீக்கக் கோரியும், அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்தும் மாவட்டத்தின் பல இடங்களிலும் மக்கள் மறியற் போராட்டங்களையும், பேரணிகளையும் நடத்தி இருக்கிறார்கள்.

குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கும் ஏனைய பாவனைப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. மாவட்ட மக்களில் சுமார் எண்பது சத வீதத்தினர் பட்டினி நிலையில் வாடுகிறார்கள். உற்பத்தியும் உழைப்பும் குறைந்து போயின. அதனால் பசிபோக்குவதும், உயிர்வாழ்வதும் கேள்விக்குரியனவாகி வருகின்றன.

பசி வந்திடப் பத்தும் பறந்திடும். ஆகவே தமிழர்களைப் பசி கிடக்கச் செய்தால் அவர்கள் தமது உரிமைகளைப் பற்றிய சிந்தனை இல்லாதவர்களாகி விடுவார்கள். அத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழர்களுக்குப் பாதகமான ஒரு தீர்வை திணிப்பது இலகுவாகிவிடும் என்ற மூலோபாயத்துடன் அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது இது மிகத் தெளிவு.

குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதைகளைத் தடுத்துவிட்டு, உணவுப் பொருள்களை அனுப்பாதிருப்பது அந்த மூலோபாயத்தின் ஓர் அங்கமே. அதுவும் யாழ் மாவட்டத்தில் வானம் பொய்த்து நெல் விளைச்சல் 'சைபர்' நிலையை எட்டியுள்ள வேளையில், உணவுப் பொருள்களை அனுப்பாதிருப்பதன் மூலம் மக்கள் மீதான நெருக்குதலை மேலும் இறுக்கி உள்ளது. சந்தர்ப்பம் பார்த்து தமிழர்களின் மனவலிமையை உடைக்க முயல்கிறது அரசு!

அதற்காக குடாநாட்டு மக்கள் தமது பட்டினி நிலையை, தாம் பசி கிடப்பதை, அதனால் பலர் பட்டினிச்சாவை எதிர்நோக்குவதை எடுத்துச் சொல்லாமல் இருக்கலாமா? அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். பசியை அடக்கிக் கொண்டு மௌனம் சாதிக்கும் குழந்தை மரணத்தை எதிர்நோக்க வேண்டியதுதான்.

ஆகையால், குடாநாட்டு மக்கள் தமது பட்டினி நிலையை எடுத்துச் சொல்வது அவசியம். அந்த அழுகை, மனித நேயம் உள்ள ஒரு சில வெளிநாடுகளின் சிந்தையையாவது உருகச் செய்யாதிருக்காது. அதன் பயனாக அவை ஸ்ரீலங்கா அரசு மீது நெருக்குதல் கொடுக்கக் கூடும்.

ஆனால் அந்த நம்பிக்கையிலேயே காலத்தைக் கழிக்காமல், எமது மண்ணில் விளைவிக்கக் கூடிய உணவு வகைகளை உற்பத்தி செய்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். குடாநாட்டின் கால நிலை வழமைக்குப் புறம்பாக மாறி வருவதை அவதானிக்கலாம். மழை குறைந்து நிலத்தடிநீரும் அருகிவருகிறது. மே மாதத்தில் வீசுகின்ற தென் திசைக் காற்று இப்போதே வந்து விட்டது. மொத்தத்தில் இவை யாவும காலநிலையின் முந்திய பருவகால வட்டத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காட்டுகின்றன.

ஆகையால், குடாநாட்டின் விவசாயக் காலங்களும், பயிர்களும், விவசாய முறைகளும் மாற்றப்பட வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது. இது சம்பந்தமான ஆய்வுகளும செயல் திட்டங்களும் தேவைப்படுகின்றன. காலத்தின் மாற்றத்துக்கு ஏற்பவும், தேவைக்கு ஏற்பவும நாம் எம்மையும் எமது செயற்பாடுகளையும் மாற்றிக் கொள்ளுதல் அவசியம். இது காலத்தின் தேவை.

காலம அறிந்து செயற்படத் தவறுவோமானால் நாம மட்டுமல்ல எமது எதிர்காலச் சந்ததியினரும் வளமான வாழ்க்கையை மறுக்க நேரிடும்.

இன்று கஷ்டமுறுகிறோம் என்பதற்காக நாளையை இருளடைய அனுமதிக்கக் கூடாது.

## நாளை

யாழ்ப்பாணம், பெப். 24 கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்திற்கு புதிய அனுமதி கிடைத்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக்கழக அலுவலகத்தில் நடைபெறும்.

o o o

யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கல்வி உத்தியோகத்தர்களுக்கான வேலைக்களப் பயிற்சி நாளை காலை 9-30 மணிக்கு மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை செந்தில்நாதன் தலைமையில் மேற்படி சபை மண்டபத்தில் நடைபெறும்

(க-162)

o o o

வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு.வி. சிவஞானபோதன் தலைமையில் நடைபெறும்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் செல்வி ரூபினி கனகரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.)

(க-162

o o o

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை வியாழக்கிழமை கல்லூரி மைதானத்தி நடைபெறும்.

பிரதம விருந்தினராக மந்திகை அரசினர் வைத்திய சாலை மாவட்ட அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை கலந்து கொள்வார்.

(க-15)

o o o

ஏழாலை மத்திய மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டி நாளை வியாழக் கிழமை நடைபெறும்.

(க-45)

o o o

வடமராட்சி கோட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் அருட்திரு பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-118)

o o o

போராட்ட வரலாற்றில் பெப்ரவரி மாதத்தில் வீரச்சாவடைந்த — பளை வட்டத்தைச் சேர்ந்த — மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை முகமாலை இந்திராபுரம் மக்கள் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும். (உ-117)

o o o

யாழ் மாவட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு நாளை காலை 9.30 மணியளவில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். (உ-162)

o o o

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் யாழ் மாவட்ட அலுவலகத் திறப்பு விழா நாளை காலை 9 மணிக்கு உரும்பராய் சந்தியில் — சிவகுமாரன் சிலை அருகில் இடம்பெறும்.

(உ)

o o o

யாழ் பல்கலைக்கழக தமிழ் மன்றம் ஏற்பாடு செய்துள்ள "நமக்குத் தொழில் கவிதை" என்ற தலைப்பிலான கவியரங்கம் நாளை பிற்பகல் 4.15 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில நடைபெறும் கவியரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கவிஞர் சோ. பத்மநாதன், கவிஞர் எஸ். சிவலிங்கராஜா, கவிஞர் என். சண்முகலிங்கன், கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் பங்கேற்பர்.

## இன்று

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தினர் நடத்தும் கருத்துரைத் தொடர் 5 இன்று பிற்பகல் 3 மணிக்கு புவியியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

"இலங்கையைச் சிறப்பு தாரணமாகக் கொண்ட விவாக நிலையும் அதன் பண்புகளும்" என்ற தலைப்பில் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கா. குகபாலன் கருத்துரை வழங்குவார். (த-87)

o o o

நீண்டகாலம் இயங்காமல் இருந்த புலோலி பொதுமக்கள் இலவச நூலகம் இன்று காலை திறந்து வைக்கப்படும். புலோலி கிழக்குப் பகுதி மக்களால் இந்த நூலகம் புனரமைப்பு செய்யப்பட்டது.

(த-109)

## இன்றைய ஆட்டம்

ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் கொண்ட லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ சிறிமுருகன் அணி எதிர் ஜொலி போய்ஸ் அணி.

★ கணேசன் அணி எதிர் புத்தூர் வீனஸ் அணி.

(உ-20)

★ ★ ★

யாழ். வட்ட லியோ கழகம் நடத்தும்உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் அரையிறுதி ஆட்டங்கள் இன்று அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றன.

★ பிற்பகல் 3-30 மணி:- பாடும்மீன் எதிர் சென். நிக்கலஸ்

★ பிற்பகல் 4-30 மணி:- சென். அனிரனீஸ் எதிர் சென் றோக். (ஒ)

## இலட்சார்ச்சனை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மாசிமக இலட்சார்ச்சனை நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது.

தொடர்ந்து பத்துத்தினங்களும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இலட்சார்ச்சனை மாலை 5மணி வரை நடைபெறும்.

இலட்சார்ச்சனை பூர்த்தி தினமான—எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை — மாசி மகத்தன்று—தீர்த்த உற்சவம் நடைபெறும்.

(ஒ-க)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை நாளை வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது

பத்தாவது நாள் சுவாமி வீதியுலா நிகழ்ச்சியுடன் வைபவம் நிறைவு பெறும்.

(க-28)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மாசிமக இலட்சார்ச்சனை நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி, எதிர்வரும் 7ஆம் திகதி மாசி மகத்தன்று பூர்த்தி வைபவம் இடம்பெறும். (ஒ)

## யோகாசன கருத்தரங்கு

'சுகம் சுந்தர யோகம்" என்னும் பொருளிலான யோகாசனக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு சட்டநாதர் கோவில் வீதியில் உள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் நந்தி, யோகாசனக் கலாநிதி சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி முதலியோர் கருத்தரங்கில் சிறப்புரை வழங்குவார்கள் யோக சிகிச்சை முறையை எடுத்துக் காட்டும் யோகாசனப் பயிற் [illegible] (ஒ)

# இந்தியா மீண்டும் வெற்றி

இந்தியாவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையேயான மூன்றாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ் 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 244 ஓட்டங்களைப்பெறவேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்சை ஆடத்தொடங்கிய இங்கிலாந்து, நேற்று உணவு இடைவேளைக்குப் பின்னர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 229 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஓட்ட விவரம் :—

இந்தியா :- 591 ஓட்டங்கள்

இங்கிலாந்து :- 347 ஓட்டங்களும், 229 ஓட்டங்களும்.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்த டெஸ்ட் போட்டித் தொடரில் இந்தியா முதல் ஆட்டத்தில் 8 விக்கெட்டுகளாலும், இரண்டாவது ஆட்டத்தில் இன்னிங்ஸ் மற்றும் 22 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றிருந்தது தெரிந்ததே. (உ-எ)

### சர்வதேச அமைப்புகளின்

# பிரதிநிதிகள் அறுவர் இடையில் திரும்பினர்

யாழ்ப்பாணம் நோக்கிவந்த நான்கு சர்வதேச அமைப்புக்களின் ஆறு பிரதிநிதிகள் நேற்று பருத்தித்துறையுடன் இடையில் திரும்பினார்கள்.

யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் நோக்குடன் கெயர் இன்ரநஷனல், ஐக்கிய ராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம், ரெட்பானா, போரூட் ஆகியவற்றின் ஆறு பிரதிநிதிகள் விமான மூலம் நேற்று முன்தினம் பலாலி வந்திருந்தனர்.

அவர்கள் 'குமாரி' கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு நேற்றுக்காலை வந்து சேர்ந்தனர் என்றும் —

ஊரடங்கு உத்தரவு காரணமாக அவர்களை கப்பலில் இருந்து இறங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என்றும்—

அதன் காரணமாக அவர்கள் பலாலிக்குத் திரும்பிச் சென்றதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

ஊரடங்கு அமுலில் இருந்தாலும் அந்தப் பிரதிநிதிகள் பருத்தித்துறையில் இறங்கி யாழ்ப்பாணம் செல்லலாம் என்று கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியதாகவும்—

அந்தத் தகவல் யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கு முன்னர் குமாரி கப்பல் பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறை திரும்பிச் சென்று விட்டதால் அக்கப்பலில் இருந்த மேற்படி ஆறு பிரதிநிதிகளும் இறங்க முடியாமல் போனதாகவும்—

அவர்கள் கொழும்பு திரும்பாமல் பலாலியில் நேற்றிரவு தங்கியிருந்தால் பருத்தித்துறை வழியாக இன்று யாழ்ப்பாணம் வரக்கூடும் என்றும் — மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-3)

# மட்டு. காரைதீவில் அகதி முகாம் தீக்கிரை

யாழ்ப்பாணம், பெப். 24 கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டம் காரைதீவில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் முகாம் தீக்கிரையானது.

அந்த முகாமில் இருந்த இரு குழந்தைகள் தீயில் சிக்கி கருகி மாண்டதாகவும்—

முகாம் தீக்கிரையானதற்கு அங்குள்ள அதிரடிப் படையினரே பொறுப்பு என கருதப்படுவதாகவும்—

முகாம் தீக்கிரையான சம்பவம் நடந்த தினமன்று காலையில் அந்த முகாமில் இருந்த 300 ஆண்களை அதிரடிப் படையினர் கைது செய்து தமது முகாமுக்குக் கொண்டு சென்றனர் என்றும் — "புலிகளின் குரல்" தெரிவித்தது.

(உ 3)

# துர்க்கையம்மன் சுற்றாடலை தாக்குதலற்ற பகுதியாக்குக!

## செஞ். குழுவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 24 தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயப் பகுதியை தாக்குதல் அற்ற பகுதியாக பிரகடனம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆலயத்தில் நாளை முதல் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் இலட்சார்ச்சனை நிகழ்வின் போது அங்கு பக்தர்கள் ஏராளமாகக் கூடுவார்கள் என்றும்—

அந்த காலப்பகுதியில் பக்தர்களுக்கு உதவும் வகையில் தாக்குதல் அற்ற பகுதியாக்குமாறும்—கோரப்பட்டுள்ளது

முக்கிய உற்சவ தினங்கள் பற்றிய விவரங்களை பரிபாலன சபையிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

(உ-3)

## 440 மைல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாறு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

"சென்னைக்கு தென் கிழக்கே 440 கடல் மைல்களுக்கு அப்பால் தென்பட்ட அந்தக் கப்பலை இந்தியக் கடலோரக் காவல் படைக் கப்பல்கள் அழைத்து வந்தன

சர்வதேச சட்டப்படி இக் கப்பலின் மாலுமிகளையும் சரக்குகளையும் சோதனையிட இந்தியக் கப்பலுக்கு உரிமை உண்டு.

"அதை அறியாத அந்தக் கப்பலின் தலைவர் இந்திய அதிகாரிகளுக்கு அந்த உரிமையை மறுத்ததால் அக்கப்பலை சென்னைத் துறைமுகத்துக்கு வருமாறு அந்த அதிகாரிகள் அழைத்தனர்.' — இவ்வாறு அந்த பதில் மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-எ]

## அனுமதி

யாழ்ப்பாணம், பெப் 24 பருத்தித்துறையில் கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் வேலை மாலை 6 30 மணி வரை நடைபெறும்.

வழக்கமாக மாலை 4 30 மணியுடன் முடிவடையும் இப்பணிகளை, இனிமேல் மாலை 6 30 மணிவரை நீடிக்க கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதித்திருப்பதாக—

யாழ் அரச அதிபர்கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்கு தகவல் அனுப்பியுள்ளார். (உ-3)

## புதிய தூதர் பதவியேற்பு

கொழும்பு, பெப். 24 இலங்கைக்கான புதிய இந்தியத் தூதர் நரேஷ்வர் தயாள் தமது நியமனப் பத்திரங்களை ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் நேற்று சமர்ப்பித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

12 02-93 இல் அமரத்துவமடைந்த

திருமதி

## வள்ளியம்மை வேலுப்பிள்ளை

எங்கள் அருமைத் தாயாரின் மரணச் செய்தி அறிந்து, அனுதாபம் தெரிவித்து 15 02-93 ஆம் திகதி நடைபெற்ற இறுதி ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர், முன்னை நாள் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ முதல்வர்கள், மாணவர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர், விரிவுரையாளர்கள், வணிக பீட பீடாதிபதி, இரண்டாம் வருட பயிற்சி ஆசிரியர்கள், வணிக மன்றத்தினர் மற்றும் வர்த்தகவியல் பிரதிக் கல்விப்பணிப்பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் முறைசாராக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், கொக்குவில் இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்கள், யாழ். கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வணக்கம்.

செல்வி என். வேலுப்பிள்ளையும்,
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்-
வர்த்தகவியல்)
குடும்பத்தினரும், சகோதரர்களும்.

18, மணல்தரை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/4615)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னர் சிவசுப்பிரமணியம்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பொன்னர் சிவசுப்பிரமணியம் 19 02-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருநாகர் பொன்னர் (சோதிடர்) — திருமதி பொன்னர் மீனாட்சி ஆகியோரின் அன்பு மகனும், பத்மாதேவியின் அன்புக் கணவரும், கிருஷ்ணர், மகேஸ்வரி, சிவகுரு (கிருஷ்ணா றேடியோ), சிவமணி, பேரின்பநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்,

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. பேரின்பநாதன்
(சகோதரன்)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

[5832]

## வள்ளியம்மை சின்னத்தம்பி

கொட்டக்காடு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வள்ளியம்மை சின்னத்தம்பி 23 - 2 - 93 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முத்துக்குமாரு சின்னத்தம்பியின் (துரையப்பா — மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, நாகரத்தினம்மா (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற சண்முகம், பேரின்பநாயகம் (அக்குரோஸ், யாழ்ப்பாணம்), ஒங்காரவடிவேல் (சவுதி), ஆகியோரின் அன்புத் தாயாரும், இ. பாலசிங்கம் (உப. அரசாங்க அதிபர், வேலணை), விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும், பத்மராஜா (கொழும்பு). பத்மா, அருளீசன், லோகதாரணி (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-2-93) காலை 11 00 மணிஎயவில் நடைபெற்று, பூதவுடல் கொத்துத்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சி. பேரின்பநாயகம்
(மகன்)

கொட்டக்காடு,
வட்டுக்கோட்டை.

(24580)

## ஐயம்பெருமாள் நடராசா

ஐயம்பெருமாள் நடராசா (ஓய்வுபெற்ற தபால் அதிபர், அனலைதீவு) காலமானார். அன்னார் அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற வ. ஐயம்பெருமாள் — நாகம்மா தம்பதிகளின் மூத்தபுதல்வனும், காலஞ்சென்ற புஷ்பலட்சுமி, மனோன்மணி ஆகியோரின் அன்புக் கணவரும், பரிமளாதேவி, திலகராசா (கனடா), கேசவராசா (பிரான்ஸ்), பங்கஜம், மாதவராசா (சுவிஸ்), நிர்மலசோதி, வைகுந்தராசா (இந்தியா), பேரருட்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகரெத்தினம் (ஆஸ்திரேலியா), பொன்னம்பலம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற பூரணதேவி (மலேசியா), விமலாதேவி, பத்மாதேவி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். 17-02-93இல் சென்னையில் காலமான அன்னாரின் ஈமச்சடங்குகள் 19-02-93 இல் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
விமலாதேவி
(சகோதரி)

958/8 நாச்சிமார் கோவிலடி,
K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

[24581]

## மகாராஷ்டிர முதல்வர் ராஜினாமா

புதுடில்லி, பெப் 24

மகாராஷ்டிர மாநில முதல்வர் சுதாகர் ராவ் நாயக் தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஷரத் பவாரின் ஆதரவாளர்களான அறுவரை தமது அமைச்சரவையிலிருந்து முதல்வர் நாயக் பதவி நீக்கியதைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக அரசியல் நெருக்கடி நிலவி வந்தது.

(த-எ-6)

## ஜெயலலிதாவின் சொத்து

புதுடில்லி, பெப். 24

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தற்போதைய சொத்துகளின் பெறுமதி 5 கோடியே 81 லட்சம் ரூபா என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ராஜ்ய சபையில் நேற்று ஜனதா கட்சி எம்.பி. டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் கேள்வி ஒன்றுக்கு அளிக்கப்பட்ட எழுத்து மூலமான பதிலில் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் சந்திரசேகா மூர்த்தி இத் தகவலை வெளியிட்டார்.

1991 - 92 இல் 2 கோடியே 60 லட்சம் ரூபாவாக இருந்த ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு —

1992 - 93 ஆம் ஆண்டில் 5 கோடியே 81 லட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளது என்று அவர் கூறினார். (உ-எ)

## மற்றொரு கப்பல் வரும்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்டத்தில் உள்ள ப நோ. கூ. சங்கங்களுக்கான ஒரு தொகுதி உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் கப்பல் ஒன்று விரைவில் பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

இதுபற்றிய தகவல் கொழும்பில் இருந்து யாழ். அரச அதிபரால் நேற்று செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(உ-3)

## 108 மாணவர்கள் கைதாகி விடுதலை

கொழும்பு, பெப் 24

பல்கலைக்கழகப் பிரச்சினைகள் தொடர்பான தமது கருத்துகளைத் தெரிவிக்கும் பத்திரிகைகளை மாத்தறை பஸ் நிலையத்தில் விநியோகித்துக் கொண்டிருந்த தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் 108 பேர் நேற்றுக் கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

(உ-6)

## தெல்லிப்பளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 8 மணியளவில் தெல்லிப்பளை உதவி அரச அதிபர் அலுவலகத்தின் முன்னால் மறியற் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்கள் அரசின் செயற்பாடுகளைக் கண்டிக்கும் பல பதாகைகளை வைத்திருந்தனர். கண்டனக் கோஷங்களையும் எழுப்பினர்.

மறியல் போராட்டம் நண்பகல் 12 மணிக்கு முடியும் வேளை உதவி அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

உடுவிலில்

வலி - தெற்கு (உடுவில்) உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் காலை 7 மணி தொடக்கம் மு. ப. 11 மணி வரை மறியற் போராட்டம் நடைபெற்றது.

மறியல் போரில் கலந்து கொண்டவர்கள் கண்டனக் கோஷங்களை எழுப்பியதோடு பதாகைகளையும் ஏந்தி நின்றனர்.

இவர்கள் உடுவில் உதவி அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். ([illegible])

## மல்லாகத்தில் ஷெல்...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சவேரியார் தேவாலயத்தில் தஞ்சம் புகுவதற்காகச் சென்ற மார்க்கண்டு விமலேஸ்வரி (வயது 20) என்ற இளம்பெண் தேவாலயத்திற்கு முன்பாக விழுந்த ஷெல்லினால் படுகாயமடைந்தார். யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும் வழியில் அவர் மரணமானார்.

அவருடன் தேவாலயத்தை நோக்கி வந்து கொண்டிருந்த அவரது உறவினர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.


# பட்டப்படிப்புகள் பிரிவு

உடுவில் மகளிர் கல்லூரி
தொடர் கல்வி நிலையம்

# B. A. (PART I)

யாழ். பல்கலைக்கழகம்

பொருளியல்

**திரு. S. வரதராஜன்** B. A. (Hons.)

புதன் – வெள்ளி
3 – 4 p. m. MACRO - ECONOMICS
4 – 5 p. m. MICRO - ECONOMICS

தமிழ்

**திரு. குழந்தைவேலு** (B. A. Hons.)

இந்துநாகரிகம்

**திருமதி பவசிங்கம்** B. A. (Hons.)

அரசியல்

**திரு. செல்வரட்ணம்** B. A.

ஆங்கிலம்

**திரு. தெய்வதவபாலன்** Dip-in-Eng.

G. A. Q வகுப்புகளும் நடைபெறுகின்றன.

(சி/4613)



ஈழம் வாழ் இந்துப் பெருமக்களே!
உங்களுக்கோர் பணிவான வேண்டுகோள்

# சைவச் சிறார்களுக்கு உதவுங்கள்

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திற்கு பல்வேறு உதவிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

உதவிகளை வழங்க விரும்புகின்ற அன்பர்கள், சரீர உதவிகளாகவும், பணமாகவும், பொருளாகவும் வழங்கி சிறார்களது எதிர்கால நலனுக்கான பூரண ஒத்துழைப்பினை நல்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

ப. கணேசலிங்கம்
பதில் முகாமையாளர்.

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(சி/4611)


# OBITUARY

## Manuelpillai Benjamin

The death occurred on 18-2-93 in Colombo and the funeral took place on Twenty first Sunday of Mr. Manuelpillai Benjamin aged 92 (Retired O. A.. Survey Department) beloved husband of Late Rasamany, Loving father of Zelina, Late Basil Benjamin Thilaga, Kamala and Shanthi, Father-in-Law of Dr. Ariyanayagam (Hyderabad), Dr. Mrs. Nirmala Benjamin (Colombo), Jeevam Segarajasinghe (Canada), Bala Nagalingam (Teacher, St Benedicts College, Colombo) and Elmo Xavier (Australia) and Brother-in-Law of Edwin Mariampillai (Proprietor, Sound Engineers, Jaffna).

Jaffna
(C/4616)

Informant:
**Edwin Mariampillai**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-02-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org